


பி. ஸ்ரீ.

131. "இராமன் உன் மைந்தன்!"

சக்ரவர்த்தி பயந்து கொண்டே, "என்ன நடந்தது?" என்று கேட்டு விட்டு, "உன்னை இகழ்ந்தவர் மாள்வர்!" என்று கம்பீரமாகச் சொல்லிப் பேரன்புடன் கைகேயியைத் தேற்றப் பார்த்தார். அவளை இகழ்ந்தவர் கொலைத் தண்டனைக்கும் உரியராவர் என்பதைத் தான் "மாள்வர்" என்று சொல்கிறார்.

தசரதருள்ளம்

அந்தோ! மனிதனது குறுகிய திருஷ்டியை என்னென்று சொல்வது? உண்மையில், இவரே அவளது கொடிய எண்ணத்தை உணர்ந்து கொண்ட பின் அவளை இகழப் போகிறார்; மாளப் போகிறார்! தசரதருக்கும் கைகேயிக்கும் நடைபெறும் சம்பாஷணையின் தொடக்கத்தில், மரணம் — தசரதருக்கு ஏற்படப் போகும் மரணம் — இவர் அறியாமலே இவர் வாக்கில் வந்து விழுகிறது!

"யார் உன்னை என்ன சொன்னார்? சொல்ல மாட்டாயா? யாராக இருந்தா லென்ன? நான் தண்டிக்காமல் விடமாட்டேன்; மரண தண்டனையே விதித்து விடுவேன்! நடந்ததை யெல்லாம் நீ சொன்ன பின் பார் நான் செய்வதை! சொல்லிவிடு" என்று அஞ்சியும், கொஞ்சியும், தடுமாறியும், ஆத்திரம் கொண்டும் பேசும் சக்ரவர்த்தியின் உள்ளமே தெரிந்து விடுகிறது, பளிங்கிலே வைத்துப் பார்ப்பது போலப் பின்வரும் பாட்டிலே:

அன்னது கண்ட அலங்கல்
மன்னன் அஞ்சி,
'என்னைநி கழ்ந்த(து)? இஞ்ஞாலம்
ஏழில் வாழ்வார்,


உன்னை இகழ்ந்தவர், மாள்வர்!
உற்ற தெல்லாம்
சொன்னபின் என்செயல் காண்டி!
சொல்லி(டு)' என்றான்.

[அன்னது — அது. அலங்கல் — மாலை. என்னை — என்ன. ஞாலம் — உலகம். உற்றதெல்லாம் — நடந்தது முழுவதும். காண்டி — காண்பாய்.]

தசரதர் சிரிப்பு

கைகேயியிடம் தசரதருக்கு உள்ள இதயபூர்வமான மதிப்பும் நம்பிக்கையும் காதலும் ஒருங்கு வெளிப்படுகின்றன, இப்பாட்டிலே. இந்தப் பேச்சைக் கேட்டதும் கைகேயி கண்களிலிருந்து நீர்த்துளிகள் முத்து முத்தாக விழுகின்றன; மார்பிலே கண்ணீர் பெருகி மாலை மாலையாக வழிந்தோடுகின்றன. சொல்லத் தொடங்குகிறாள்: "ஐயோ! உமக்கு அடியாளிடத்தில் இவ்வளவு தயவு இருக்கிறதா? உண்மைதானா? அப்படியானால் முன்னே கொடுத்த வாக்கை இப்போது நிறைவேற்ற வேணும்" என்று கெஞ்சுகிறாள்.

சக்ரவர்த்திக்குச் சிரிப்பு வந்து விடுகிறது. 'கைகேயி ஒன்றைக் கேட்டு நாம் மறுத்ததாக ஞாபகம் இல்லையே! ஒரு நாளும் இல்லாத திருநாளாக இன்று என்ன வேடிக்கை செய்கிறாள்' என்று எண்ணித்தான்



தசரதர் சிரித்திருக்க வேண்டும். 'அட்டா! இதுதானா? இதற்காகவா இவ்வளவு கஷ்டமெல்லாம?' என்ற அந்தச் சிரிப்பிலும், சிரித்துக்கொண்டு சொல்லும் மறுமொழியிலும் கபடமறியாத காதலுள்ளம் அப்படியே வெளியாகிறது:

கள்ளவிழ் கோதை கருத்துண
ராத மன்னன்,
வெள்ள நெடுஞ்சுடர் மின்னின்
மின்ன நக்கான்;
'உள்ளம் உவந்தது செய்வன்,
ஒன்றும்உ லோபேன்,
வள்ளல் இராமன் உன்மைந்தன்
ஆணை!' என்றான்.

[கள் — தேன். அவிழ் — (இங்கே) கசிகின்ற. கோதை—மாலை யணிந்த கூந்தலோடு கூடிய கைகேயி. வெள்ள நெடுஞ்சுடர் — நீண்ட சுடர்ப் பெருக்கு அல்லது ஒளிவெள்ளம். மின்னின் — மின்னல் போல். நக்கான்—சிரித்தவனாய். செய்வன்—செய்வேன். ஒன்றும் உலோபேன் — கொஞ்சமும் லோபம் செய்ய மாட்டேன்.]

விதியும் சிரிக்கிறது!

"நீ கேட்க உத்தேசித்திருக்கிற காரியத்தை—உன் உள்ளம் விரும்பியதை — நானும் உள்ளம் உவந்து செய்வேன். கொஞ்சமும் கருமித்தனமில்லாமல் நீ வேண்டியதைத் தருவேன். உன்னிடமா லோபம் பண்ணப் போகிறேன்?" என்று பேசிக் கொண்டே வந்த சக்ரவர்த்தி, "உன் மகனான ராமன்மேல் ஆணை!" என்று பிரதிக்ஞை செய்து கொடுக்கிறார்.

தன் உயிரைக் காட்டிலும் மேலாகத் தான் மதித்திருக்கும் தன் மகனாகிய ராமனை 'உன் மகன்' என்று கைகேயியிடம் குறிப்பிடுவது கவனிக்கத் தக்கது. ஆணை இடுவதற்கு ராமன் பெயரை இயற்கையாகச் சக்ரவர்த்தி உபயோகிக்கிறார் சிரித்துக் கொண்டே. விதியும் பிடரியிலிருந்து சிரிக்கிறது!

கோடிக் கணக்கான சாட்சிகள்!

தசரதர் ஒரு வாக்குக் கொடுத்து விட்டால் யாருக்குமே சந்தேகம் வேண்டியதில்லை. சாதாரணமாக வாக்குக் கொடுத்தாலும் தவறவே மாட்டார். உயிரைக் கொடுத்தும் வாக்கைக் காப்பாற்றக் கூடியவர். இப்போது கைகேயிக்கு ராமன் மேல் ஆணையிட்டு வாக்குக் கொடுத்துவிட்டதால், தன் காரியம் வெற்றி அடைந்து விட்டதென்றே தைரியமடைந்து விட்டாள்:

ஆன்றவன் அவ்வுரை கூற,
அன்னம் அன்னாள்,
"தோன்றிய பேர்அவ லம்து—
டைத்தல் உண்டேல்,

சான்(று)இமை யோர்குலம் ஆக
மன்ன! நீஅன்(று)
என்ற வரங்கள் இரண்டும்
ஈதி' என்றாள்.

[ஆன்றவன் — உயர்ந்த சில முன்னவன்; (இங்கே) தசரதர். அன்னம் அன்னாள் — அன்னம் போன்ற கைகேயி. பேரவலம் — பெருந் துன்பம். துடைத்தல் உண்டேல் — துடைப்பது உண்டு என்றால்; துடைக்க வேண்டுமென்று நீ நினைத்தால். சான்று—சாட்சி. இமையோர் குலம் — தேவர் கூட்டம். என்ற வரங்கள் — (தருவதற்கு) இசைந்த வரங்கள். ஈதி — கொடுப்பாயாக.]


ராமன் மேல் சக்ரவர்த்தி பிரதிக்ஞை செய்து கொடுத்த பின்பு, கைகேயி, "நீர் அன்று எனக்கு வரங்கள் கொடுப்பதாக ஒப்புக்கொண்டு பிரதிக்ஞை செய்ததற்குத் தேவர்களெல்லாம் சாட்சி; ஆம், முப்பத்து முக்கோடி சாட்சிகள்!'' என்று சொல்லுகிறாள். தான் புதிதாக ஒன்றும் கேட்கவில்லையாம்; முன்பு தரப்பட்டு வேண்டியபோது கொள்ளும்படி வைத்திருந்த வரங்களைத் தான் 'தாரும்' என்று கேட்கிறாளாம்.

இப்படியெல்லாம் கைகேயி சொல்வதிலிருந்தே 'தசரதர் எங்கே வாக்குத்தவறி விடுவாரோ?' என்ற பயமும் இவளுக்கு இருக்கிறது என்று ஊகிக்கலாம். 'சக்ரவர்த்திக்கு உயிரே ராமன்தான்! அந்தக் காதல் தன் மீதுள்ள காதலையும் வென்று விடலாம்' என்பதையும் அறியாதவளா இவள்? சத்தியத்தின்மீதுள்ள காதலையும் வென்றுவிடக்கூடிய காதல் அல்லவா?

* * *

இப்படிக் கோடிக் கணக்கான சாட்சிகளைக் குறிப்பிட்டு இவள் பேசியது தசரதருக்குப் புரியவில்லை. ஆகவே, இவர் இவளைப் பார்த்து, "ஏனம்மா இவ்வளவு கஷ்டத்துக்கெல்லாம் உன்னை நீ உள்ளாக்கிக் கொள்கிறாய்? இப்படியெல்லாம் செய்வதால் என்னையும் எவ்வளவோ கஷ்டத்துக்கு உள்ளாக்குகிறாய் பார்! அந்த வரத்தை இப்போதே வாங்கிக் கொள்'' என்று அவசரப்படுத்துகிறார். இவளுடைய வஞ்ச நெஞ்சுதான் இவருக்குத் தெரியாதே!

சித்திர ராமாயணம்



பி. ஸ்ரீ.

132. கட்டடம் தவிடுபொடி !

'இனிமேல் சுற்றிச் சுழற்றிப் பேசிக் கொண்டிருக்கலாகாது; கேட்டே விடவேண்டியதுதான் வரத்தை!' என்று துணிந்த கைகேயி, "நீங்கள் ஏற்கெனவே கொடுத்திருந்த இரண்டு வரங்களில் ஒன்றினால் என் மகன் அரசாள வேண்டும்" என்று சொன்னாள். இதைக் கேட்டதும் சக்ரவர்த்தி என்ன நிலையை அடைந்திருப்பார்? திடுக்கிட்டு வேதனைப் பட்டிருப்பார் என்று நினைக்கிறீர்களா? அதுதான் இல்லை. சக்ரவர்த்தி மகிழ்ச்சி யடைந்திருப்பார் என்றுதான் சொல்ல வேண்டும். ஏன்? எப்படி?

'ராமன் இவள் மகன்தானே!'

வரம் கொள்ளவேண்டுமென்று கைகேயிக்கு எவ்வளவு ஆத்திரமோ, அவ்வளவு ஆத்திரம் தசரதருக்கும் வரங்களைக் கொடுத்து விட்டு மறு ஜோலி பார்க்கவேணுமென்று. இதை உணர்ந்து கொண்ட கைகேயி தைரியமாக, தெளிவாக,

ஏயவ ரங்கள்இ ரண்டின்
ஒன்றி னால்,என்
சேய்அர சாள்வது......

[ஏய — நீ இசைந்து கொடுத்ததால் எனக்குக் கிடைத்திருக்கிற. சேய் — மகன்.]

என்று சொல்ல ஆரம்பித்து விடுகிறாள். இது வரையில் சக்ரவர்த்திக்கு மனசுக்குள்ளே மகிழ்ச்சி தான். 'இவளுடைய மகன் தானே அரசாளப் போகிறான். வரம் எதற்காக?' என்று கூடத் தசரதர் எண்ணி யிருக்கலாம். கைகேயி அன்றுவரை ராமனைத் தானே தன் மகனாக மதித்திருந்தாள்? 'சரி, இன்னும் ஏதோ சொல்லப் போகிறாளே, மேலே பேசட்டும்' என்று தசரதர் கேட்டுக் கொண்டிருக்கிறார்.

சீதையையும் வெறுக்கும் கொடுமை

'இன்னொரு வரத்தினால் ராமன் வனம் போக வேண்டும்' என்று கேட்ட பிறகு தான் சக்ரவர்த்தி திடுக்கிட்டுப் போயிருக்க வேண்டும்:

'ஏயவ ரங்கள்இ ரண்டின்
ஒன்றினால், என்
சேய்அர சாள்வது: சீதை
கேள்வன், ஒன்றால்,
போய்வனம் ஆள்வ(து)' எனப்பு-
கன்று நின்றாள்,
தீயவை யாவையி னும்சி
றந்த தீயாள்!

[கேள்வன் — கணவன். புகன்று — சொல்லி.]

ராமனைச் 'சீதை கணவன்' என்று தான் குறிப்பிடுகிறாள். அவளால் ராமன் என்ற அந்த அருமைப் பெயரை இப்போது சொல்லவும் முடியவில்லை. வளர்த்த பிள்ளை; பெற்ற பிள்ளையாகவே நினைத்து 'ராமா, ராமா!' என்று இவளால் அழைக்கப் பெற்று வந்தவனல்லவா? அந்த வாயால் அந்தப் பெயரைச் சொல்லிக் காட்டுக்குப் போக வேண்டும் என்று எப்படிச் சொல்ல முடியும்? ஆகவே, 'சீதை புருஷன் இருக்கிறானே, அந்தப் பிள்ளையாண்டான்' என்று சொல்லுகிறாள்.

பரதன் அரசாள வேண்டும் என்றவள், ராமன் வனம் ஆள வேண்டும் என்று கூறுகிறாள்: ஹிருதயக் கொடுமை வார்த்தையிலும் பீறிக்கொண்டு புறப்படுகிறது.

நின்றாள்! — விழுந்தார்!

இப்படிச் சொல்லி நின்றாள் என்கிறான் கவிஞன். தீயவர்களும் சொல்ல வாய் கூசும் கடும் சொல்லைச் சொல்லியும், கைகேயி மனம் கலங்கித் தளர்ந்து கீழே விழுந்து விடாமல் உறுதியான ஒரு தூண்போல நிற்கிறாள் என்பது குறிப்பு.

இதுவரையில் கவிஞன் கைகேயியைத் 'தேவி' 'அன்னம்' 'தூயவள்' என்றெல்லாம் அழைத்து வந்தான். இப்போதோ அந்தத் 'தூயவளைத்' 'தீயவள்' என்று சொன்னாலும் போதாதென்று, "தீயவை யாவையினும் சிறந்த தீயாள்" என்று சொல்லி விடுகிறான். 'கைகேயி தன்



கொடிய கருத்தை இப்படி வாய் கூசாமல் தீயைக் கக்குவது போலக் கக்கிவிட்டாளே!' என்று கவிஞனுக்கே பொறுக்க முடியாத ஆத்திரம்.

இப்படியெல்லாம் துணிந்து வரம் கேட்டுவிட்ட கைகேயி தைரியமாகத்தான் நின்றாள். ஆனால் இதைக் கேட்ட சக்ரவர்த்திக்கு நிலை கொள்ளவில்லை. கேட்டாரோ இல்லையோ, அந்தத் துணிச்சலான வார்த்தைகளைத் தாங்க முடியாமல் அப்படியே விழுந்து விடுகிறார்:

நாகம்எ னும்கொடி யாள்தன்
நாவின் வந்த
சோகவி டந்தொட ரத்,து-
ணுக்கம் எய்தா,
ஆகம்அ டங்கலும் வெந்(து)
அழிந்(து), அராவின்
வேகம்அ டங்கிய வேழம்
என்ன விழ்ந்தான்.



[நாகம் — நாகப்பாம்பு என்று சொல்லப்படும் ஸர்ப்பம். சோக விடம்—புத்திரசோகமாகிய விஷம். துணுக்கம் — நடுக்கம். எய்தா — எய்தி, அடைந்து. ஆகம்—உடம்பு. அடங்கலும் — முழுவதும். வெந்து அழிந்து — வெதும்பிச் சோர்ந்து. அராவின் — பாம்பினால்; பாம்பு தீண்டிய காரணமாக. வேகம் — வேகம் கொண்ட மதம். வேழம் — யானை. என்ன — போல.]

நாக விஷமும் சோக விஷமும்

யானை எவ்வளவோ பலம் கொண்ட பிரம்மாண்டமான பிராணிதான். ஆனால் நாகம் தீண்டி விட்டால், தன்னுடைய வேகமெல்லாம் அடங்கிச் சோர்ந்து விழுமல்லவா? அப்படியே சோர்ந்து சாய்ந்து விழுகிறாராம் சக்ரவர்த்தி.

'நாகமெனும் கொடியாள்' என்று கைகேயியைக் குறிப்பிடுவது, 'பாலூட்டி வளர்த்தவனையும் பாம்பு கொல்லும்' என்ற பொருளையும் தொனிப் பொருளாக வெளியிடுகிறது. நாக விஷத்தைக் காட்டிலும் இந்தச் சோக விஷம் கொடுமையானது என்ற குறிப்பும் 'சோகவிடம் தொடர' என்ற சொற்றொடரில் அடங்கியிருக்கி

றது. நாக விஷம் உள்ளே புகுந்த பின்புதான் கொல்லும்; இந்தச் சோக விஷமோ தொடர்ந்த அளவிலேயே கொல்லப் பார்க்கிறதல்லவா?

சோக வேகம்

கீழே விழுந்த சக்ரவர்த்தி, கைகேயி தமக்களித்த புத்திர சோக விஷத்தைச் சகிக்க முடியாமல் தரையில் புரண்டு கொண்டிருக்கிறார். புரண்டு கொண்டே பெருமூச்சு விடுகிறார்:


பூதலம் உற்(று). அத னில்பு -
ரண்ட மன்னன்
மாதுய ரத்தினை யாவர்
சொல்ல வல்லார்?
வேதனை முற்றிட வெந்து
வெந்து, கொல்லன்
ஊதுலை யில்கனல் என்ன,
வெய்து யிர்த்தான்.

[பூதலம் உற்று — தரையில் விழுந்து. மாதுயரம் — பெருந் துன்பம். முற்றிட—முதிர்ச்சி அடைய. ஊதுஉலை—ஊதுகின்ற உலைக்களம். வெய்துயிர்த்தான்—உஷ்ணமாய்ப் பெருமூச்சு விட்டான்.]

சக்ரவர்த்தி பூமியில் விழுந்து புரண்டு, வேதனை முற்றி முதிர உள்ளமும் உயிரும் வெந்து வெந்து பெருமூச்சு விடுகிறார், கொல்லன் திருத்திவைத்து அடித்து ஜொலிக்கச் செய்யும் உலைக்களத்துக் கனலைப் போல மூச்சு விடுகிறார் என்று கூறுவது, சோக வேகத்தின் எல்லையைச் சுட்டிக் காட்டுகிறது.

வயது முதிர்ந்த நிலையில் பிள்ளை இல்லையே என்று பரிதவித்து வேள்வி செய்து நாலு பிள்ளைகளை அடைந்த சக்ரவர்த்தி, ராமனைப் பார்த்ததும் தமக்கு நாலு பிள்ளைகள் என்பதைக் கூட மறந்து, "இவனே என் சோகத்தை முற்றும் நீக்க வந்து விட்ட புத்திர ரத்தினம்; என்ன பாக்கியம் செய்தோம்! நாம் பாதுகாத்து வந்த நாட்டு மக்களுக்குத் தொடர்ந்து பணி செய்து கொண்டிருப்பான்; நாடும் மக்களும் க்ஷேமமாக வாழ்வதைக் காது குளிரக் கேட்டாவது பூரித்துப் போவோம், ராமனுக்குப் பட்டங் கட்டிய பின்!" என்றெல்லாம் கனவு—மாளிகை கட்டிக் கொண்டிருந்தார். அது தவிடு பொடி யாகும்படி கைகேயி இப்படிக் குறுக்கிட்டுவிட்டாள் என்றால், தசரத சோகத்தை மேலே சொன்னபடி தானே வர்ணிக்க முடியும்?

சித்திர ராமாயணம்



பி. ஸ்ரீ.

133. என்ன ஆசி! என்ன சாபம்!

எவ்வளவோ வேதனைக்கு உள்ளாகிக் கிடந்த தசரதருக்கு மெள்ள உணர்ச்சி பிறக்கிறது. எழுந்திருந்து மெள்ள உட்காருகிறார்; பிறகு எழுந்து நிற்கிறார்; மறுபடியும் சோர்ந்து விழுகிறார். மறுபடியும் உணர்ச்சியற்றுக் கிடக்கிறார்—மூச்சும் அடங்கிப் போய்விட்டதோ என்று சொல்லும்படி. மறுபடியும் உணர்ச்சி பிறந்ததும், 'பாவி கைகேயியை உதைத்து விடலாமா?' என்ற ஒரே ஆத்திரமும் கோபமும் தான். ஆனால், உயிர் போகும் தறுவாயில் இருப்பது போலச் செயலற்று இருப்பவனால் என்ன செய்ய முடியும்?

மனம் தடுமாறியது யார்?

ஏதோ ஒரு ஜன்னிக் கோளாறு போலிருக்கிறது சக்ரவர்த்தியின் நிலை:

மேவிநி லத்தில்இ ருக்கும்,
    நிற்கும், வீழும்
ஓவியம் ஒப்புஉ யிர்ப்(பு)
    அடங்கி ஓயும், —
பாவியை உற்(று)எதிர் பற்றி
    எற்ற எண்ணும்,
ஆவிப தைப்ப அலக்கண்
    எய்து கின்றான்.

[மேவி – பொருந்தி. வீழும் – விழுவான். ஓவியம் – சித்திரம். உயிர்ப்பு – மூச்சு. உற்று – கிட்டப்போய். எற்ற – மோத, உதைக்க. அலக்கண் – துன்பம்; வேதனை.]

கடைசியாகச் சக்ரவர்த்தி, தன் எதிரே நின்று கொண்டிருந்த கைகேயியைப் பார்க்கிறான்; கூர்ந்து பார்க்கிறான், — 'இவள் தானா

இப்படி ஒரே பிடிவாதமாகத் தன் கோரிக்கையில் ஊன்றி நிற்கிருள்?' என்று. "நீயாக மனந்தடுமாறிப் போனயா? அல்லது யாரோ அக்கிரமக்காரர் வஞ்சனையாக உன்னை இப்படி மூட்டி விட்டார்களா? என்மேல் ஆணை, நிச்சயமாய்ச் சொல்லு" என்று கேட்கிருன், அவள் மனம் மாறுபட்ட அந்தக் காரணத்தை.

கேள்விக்குப் பதில் வருகிறது கைகேயி இடமிருந்து:

"திசைத்ததும் இல்லை;எ னக்கு
வந்த தீயோர்
இசைத்ததும் இல்லை;முன் ஈந்த
இவ்வ ரங்கள்
குசைப்பரி யோய்!தரின், இன்று
கொள்வென் : அன்றேல், —
வசைப்பொருள் நின்வயின் வைத்து
மாள்வென்!" என்ருள்.

[திசைத்ததும் இல்லை — நான் மனம் திகைத்ததும் இல்லை. இசைத்ததும் இல்லை — மூட்டிவிட்டதும் இல்லை. குசை — குதிரைப் பிடரிமயிர். குசைப்பரி — பிடரிரோமம் கொய்து விட்ட குதிரை. குசைப் பரியோய்— கொய்துவிட்ட பிடரிரோமத்துடன் கூடிய குதிரைமேல் சவாரி செய்யும் வீரனே. தரின் — தந்தால். இன்று — இப்பொழுது. வசைப்பொருள் — பழியாகிய பொருள். நின்வயின் — உன்னிடத்தில்.]

"நாளுகத் திகைத்துத் தடுமாறியும் வரம் கேட்கவில்லை; பிறர் மூட்டிவிட்டும் கேட்கவில்லை. நீர் இப்படிக் கேட்பதிலிருந்து, கேட்ட வரங்களைக் கொடுக்கச் சம்மதமில்லாமல் இருக்கிறீர் என்றுதான் தெரிகிறது. சரி, வரங் கொடுக்காவிட்டால் உயிரை மாய்த்துக் கொள்வேன்! அரசச் செல்வத்தோடு வசைப்பொருளையும் நீரே வைத்துக்கொள்ளும், நிலையாக வைத்துக்கொள்ளும்; நான் மாண்டுபோகிறேன்!" என்று பேசுகிருள் கைகேயி.

'குசைப் பரியோய்!' என்று தசரதரை அழைப்பதில், இவள் பரி தூண்டி ரதம் ஊர்ந்த அந்தச் சம்பராசுர யுத்தகாலம் குறிப்பாக நினைப் பூட்டப் படுகிறது. அப்போதுதானே தசரதர் வரங்கொடுக்க இசைந்தார்? 'நான் சாரத்தியம் செய்து உம்மைக் காப்பாற்றியதால் அல்லவா நீர் புகழும் வாழ்வும் பெற்றீர்? அதையெல்லாம் இன்று மறந்துவிட்டீரா? தடுமாறிப் பேசுவது நீரா, நானு?" என்றெல்லாம் குத்திக் காட்டுவதுபோல் இருக்கிறது, "குசைப் பரியோய்!" என்ற அழைப்பின் பாவம்.

கைகேயி வீசிய வேல்

கைகேயியின் இந்தக் கடுமொழி தசரதருக்கு எவ்வளவு கர்ண கடோரமாய் இருந்திருக்க வேண்டும்! காதிலும் உள்ளத்திலும், வெந்த புண்ணில் வேல் நுழைந்ததுபோல் நுழைந்தது என்கிருன் கவிஞன்:

இந்தநெ டுஞ்சொல்அவ் ஏழை
கூறும் முன்னே,
வெந்தகொ டும்புணில் வேல்நு—
ழைந்த(து) ஒப்ப
சிந்தைதி ரிந்து,தி கைத்(து),அ—
யர்ந்து விழ்ந்தான்,—
மைந்தன்அ லா(து)உயிர் வே(று)இ
லாத மன்னன்.

[நெடுஞ்சொல் — (இங்கே) கொடுமையால் அழுத்திச் சொன்ன வார்த்தை. ஏழை — (இங்கே) கைகேயி. கூறும் முன்னே — சொன்னது தான் தாமதம். திரிந்து — மாறி; தடுமாறி. அயர்ந்து — சோர்ந்து.]

சத்தியத்திற்குச் சாபம்

தசாதருடைய புத்திர வாத்ஸல்யம் என்ன! கைகேயி பிரயோகித்த புத்திர சோக — வேலாயுதம் என்ன! தசாதர், உயிரும் உணர்ச்சியும் சோர்ந்து தள்ளாட, அப்படியே விழுந்து விட்டார், கொடிய வேலாயுதத்தால், ஏற்கெனவே வெந்து கிடந்த கொடும் புண்ணில், தாக்கப் பட்டவரைப் போல!

சிறிது நேரம் கழித்துத்தான் மறுபடியும் உணர்ச்சி வந்திருக்க வேண்டும். தள்ளாடி விழுந்து கிடந்தவர் எழுந்து உட்கார்ந்து கொண்டு எவ்



வளவு ஆற்றாமையோடு, கைகேயியை எப்படி ஆசீர்வதிக்கிறார்! சத்தியத்தையும் தர்மத்தையும் தான் எப்படிச் சபிக்கிறார்!

'ஆகொடி யாய்!' எனும்; ஆவி
காலும்; அந்தோ,
'ஓகொடி தேஅறம்!' என்னும்;
'உண்மை என்றும்
சாக!' எனாஎழும்; மெய்த(ள்)
ளாடி விழும்;
மாகமும் நாகமும் மண்ணும்
வென்ற வாளான்.

[எனும் — என்பான். ஆவி காலும் — உயிர் போகிற மாதிரி பெருமூச்சு விடுகிறான். எனா — என்று. எழும் — எழுந்திருப்பான். மெய் — உடல். மாகம் — வானலோகம். நாகம் — பாதாள லோகம். மண் — மண்ணுலகம். வாளான் — வாள் ஆயுதத்தை உடையவன்.]


'ஆ, கொடியவளே!' என்று கைகேயியை அழைத்தவன், 'தர்ம தேவதையும் கைகேயி போல் கொடியது தான்!' என்கிறான். தர்மத்தின் அடிப்படையான சத்தியத்தின் மீதும் பொல்லாத கோபமும் வெறுப்பும் பொங்குகின்றன.

'உண்மையாவது ஒன்றாவது, அது சாகட்டும்!' என்று சபித்துக் கொண்டே எழுகிறான். எழுந்திருக்க முடியாமல் விழுந்து விடுகிறான்.

எப்பேர்ப்பட்ட வீரர் இப்படித் தள்ளாடி விழுகிறார்! 'மூன்று லோகங்களையும் வென்ற வீரர், உயிரையே கக்குவது போல நெடு மூச்சு விட்டுக்கொண்டே விழுகிறார்.

'அந்தோ!' என்று கவிஞரும் அனுதாபப் பெருமூச்சு விடுகிறார்.

சித்திர ராமாயணம்



பி. ஸ்ரீ.

134. தசரதரின் மூன்று காதல்

சிந்தை திரிந்து அயர்ந்து விழுந்த சக்ரவர்த்தி சிறிது நேரம் சென்றதும் உணர்ச்சியுற்று உட்கார முயன்றார். முடியாமல் தள்ளாடி விழுந்தார். எழுந்து உட்கார முயலும்போதே 'ஆ கொடியவளே!' என்று கைகேயி அம்மாளையும், 'ஓ கொடிதே அறம்!' என்ற தர்ம தேவதையையும் வாயாரச் சபித்தார். சத்தியத்தையோ, 'சத்தியம் சாகட்டும்!' என்று சபித்தார். பெருமூச்சு விட்டுக் கொண்டே இப்படியெல்லாம் சொல்லி எழுந்து தள்ளாடி விழுந்து விட்டார் வீரமன்னராகிய தசரதர்.

வீரன் கோபம்

சற்று நேரம் கழிந்ததும் உள்ளத்திலிருந்து கோபவெறி பொங்கி எழுகிறது. கைகேயி மேலுள்ள கோபம் பெண்குலத்தையே சுற்றிக் கொள்கிறது:

'நாரியர் இல்லைஇஞ் ஞாலம்
எங்கும் என்னக்,
கூரிய வாள்கொடு கொன்று
நீக்கி, யானும்
பூரியர் எண்ணிடை வீழ்வன்!'
என்று பொங்கும்,
வீரியர் வீரம்வி ழுங்கி
நின்ற வேலான்.

[நாரியர் - பெண்கள். இஞ்ஞாலம் - இவ்வுலகம். கொடு - கொண்டு. பூரியர் - கீழ்மக்கள். எண்ணிடை - கணக்கில். பொங்கும் - பொங்குவான். வீரியர் - வீரர். விழுங்கி - (இங்கே) வென்று.]

"பெண்டுகளே இல்லை இந்த உலகத்தில் என்று சொல்லும்படி கூர்மையான வாளால் கொலை செய்து விடலாமா பெண் குலத்தை?" என்ற ஆத்திரம் ஏற்படுகிறது சக்ரவர்த்திக்கு. 'பெண்களைக் கொல்வது

கோழைத்தனம்' என்று தெரியாதா? தெரிந்தும்தான் ஆத்திரப்படுகிறது உள்ளம். யாருடைய உள்ளம்? 'பெரு வீரனன சக்ரவர்த்தியின் மனம்' என்று சொல்ல வந்த கவிஞன் அந்த வீரத்தை,

வீரியர் வீரம்வி ழுங்கி
நின்ற வேலான்

என்று சுட்டிக் காட்டுகிறான்.

உடனே 'எத்தகைய பழிக்கு, எப்படிப்பட்ட பாதகத்திற்கு, என்னை உள்ளாக்குகிறது இந்த மனசு!' என்று ஒன்றும் தோன்றாதவராய்த் திகைத்துப் போகிறார். 'அடடா, ஒன்றும் செய்யத் தோன்றவில்லையே!' என்ற ஆத்திரத்துடன் கையோடு கையை மோதிக் கொள்கிறார்; உதட்டைக் கடிக்கிறார், புழுங்கி விம்முகிறார் நெஞ்சழிந்து; சோர்ந்து போகிறார்.

சத்தியம்...நடந்து...

இந்நிலையில் 'சத்தியமே குற்றம்!' என்றுகூட எண்ணி விடுகிறாராம். யார்? உலகத்திலேயே சத்திய வாக்கிற்குப் பேர்போன தசரத மகாராஜா. சத்தியம் தவறாது இருக்க வேண்டுமென்ற கருத்துடன் தானே இப்படியெல்லாம் கஷ்டப்படுகிறார்:

கையொடு கையைப்பு டைக்கும்,
வாய்க டிக்கும்;
'பொய்யுரை குற்றம்' எனப்பு-
ழுங்கிவா டும்;
நெய்எரி உற்றென நெஞ்(சு)அ-
ழிந்து சோரும்,
வையகம் முற்றும்ந டந்த
வாய்மை மன்னன்.

[புடைக்கும் - மோதுவான். மெய்யுரை - மெய் உரைத்தல். நெய் எரி உற்று என - மிகுதியாக நெய்யைச் சொரிந்து வளர்த்த நெருப்பில் விழுந்து விட்டதுபோல. சோரும் - சோர்ந்து போவான். வையகம் முற்றும் - உலகம் முழுவதும். வாய்மை - சத்தியம்.]

தசரதருடைய சத்தியம், ராஜ்யம் முழுவதும் நடந்து ஜனங்களைக் காத்து வருகிறதாம். அவ்வளவு உயர்ந்த லட்சியத்தை யுடைய மன்னர் என்பதை,

வையகம் முற்றும்ந டந்த
வாய்மை மன்னன்

என்று குறிப்பிடுகிறான் கவிஞன்.

தசரதருக்குச் சத்தியமே உயர்ந்த லட்சியம். உயிரை விட முடியும்; இந்த லட்சியத்தை விட்டு விட முடியாது. இந்த லட்சியத்திற்காக எத்தகைய தியாகத்தையும் செய்யத் தயார். சத்தியம் தவறி விட்டால் உலகம் நிலைகுலைந்து போய்விடும் என்ற உணர்ச்சி தசரதருடைய ஹிருதயத்திலே ஊடுருவி, இரத்தத்திலே ஊறித் தசை நரம்புகளிலும் கலந்து கிடக்கிறது. எனினும், 'ராமன் மீதுள்ள காதல் அதிகமா? சத்தியத்தின் மீதுள்ள காதல் அதிகமா?' என்று தீர்மானிப்பது கஷ்டமான காரியம். கவிஞனுக்கே சிரமமாகத்தான் இருக்கிறது.

'சத்தியம் சாகட்டும்!' 'மெய்யுரை குற்றம்!' என்றெல்லாம் தசரதர் கதறிய போதிலும், ராமன் மீதுள்ள காதலுக்காகவும் சத்தியக் காதலைக் கைவிடத் துணியவில்லை. சத்தியத்தின் மீதுள்ள காதலுக்காகவும் ராமன்-காதலைக் கைவிட முடியவில்லை. இந்தப் பரம சங்கடமான நிலையில் கைகேயி - காலில் விழுந்தாவது 'சத்தியத்தையும் காப்பாற்ற வேண்டும்; ராமனையும் காட்டுக்குப் போகாமல் காக்க வேண்டும்!' என்று தீர்மானிக்கிறார். இப்படித் தீர்மானித்து,

காலின்மேல் வீழ்ந்தான்,
கந்துகொல் யானைக்
களிமன்னர்
மேல்மேல் வந்து
முந்தி வணங்கி
மிடைதாளான்.

[கந்து — கட்டுத்தறி. கொல் — (இங்கே) முறிக்கின்ற. யானைக்களிமன்னர்— யானை போன்ற செருக்கையுடைய வீர மன்னர்கள். மேல் மேல் வந்து—ஒருவர் பின் ஒருவராக வந்து. முந்தி — முற்பட்டு. மிடை—நெருங்குகிற.



தாளான் — பாதங்களையுடைய சக்ரவர்த்தி.]

மதயானை போன்ற வீர மன்னர்கள் — தொகுதி தொகுதியாக வந்தவர்கள் — ஒருவர் பின் ஒருவராக வந்து வந்து தசரதர் காலில் விழுந்து வணங்குகிறார்களாம். அப்பேர்ப்பட்ட சக்ரவர்த்தி இப்போது அபலையாகிய கைகேயி - காலில் விழுந்து வணங்குகிறாராம்.

* * *

கைகேயியை எவ்வளவோ வெருட்டிப் பார்த்தார். அவளோ ஒரே பிடிவாதமாய்ப் பரதனுக்கே பட்டம் கட்ட வேண்டுமென்றும், ராமனைக்காட்டுக்கு அனுப்பி விட வேண்டுமென்றும் சாதித்து விட்டாள். ஒரே கோபாவேசம் பொங்கி விட்டது:

'கைகேயியை — பெண்ணினத்தையே கொன்று விடலாமா?' என்று கூடத் தோன்றியது, அந்தக் கோப வெறியிலே. கடைசியாக வேறொரு யுக்தி செய்வோமென்றுதான் காலில் விழுகிறார்; யாசிக்கப் பார்க்கிறார். ஆம், அந்தப் பொல்லாத கைகேயியின் காலில் விழுந்து மன்றாடுகிறார் தசரதச் சக்ரவர்த்தி.

தசரதருக்கு மூன்று காதல்! (1) கைகேயி காதல்; (2) சத்தியக் காதல்; (3) ராமன் - காதல். இம்மூன்றில் முதலாவது காதலை இப்போது முற்றும் இழந்துவிட்ட சக்ரவர்த்தி பாக்கி இரண்டு காதல்களுக்காகவும் போராடுகிறார், பல உபாயங்களாலும்.

சித்திர ராமாயணம்

பி. ஸ்ரீ.

135. இளவரசியின் தஸ்தாவேஜு

மனைவி காலில் விழுந்த சக்ரவர்த்தி எழுந்து அவள் முகம் பார்த்து, "அம்மா! நீ ஏன் பழிக்கு உள்ளாக வேணும்? உன் மகன் பரதன் தான் இணங்கப் போகிறானா? அவன் இணங்கினாலும் உலகம் ஒப்புக் கொள்ளுமா?" என்றெல்லாம் மிகவும் பரிந்து வேண்டிக்கொள்கிறார்:

"கொள்ளான் நின்சேய்
இவ்வர(சு); அன்னான்
கொண்டாலும்,
நள்ளா(து) இந்த
நானிலம்; ஞாலம்
தனில், என்றும்,
உள்ளார் எல்லாம்
ஓதஉ வக்கும்
புகழ்கொள்ளாய்;
எள்ளா நிற்கும்
வன்பழி கொண்(டு)என்
பயன்?" என்றான்.

[கொள்ளான் — (கொடுத்தாலும்) பெற்றுக்கொள்ள மாட்டான். நின் சேய் — உன் மகனான பரதன். அன்னான் — அவன். நள்ளாது — விரும்பாது. நானிலம் — உலகம். ஞாலம் — பூமி. ஓத உவக்கும் — சொல்ல விரும்புகிற. கொள்ளாய் — கொள்ள மாட்டாய். எள்ளா நிற்கும் — (உலகம்) இகழ்ந்து கொண்டே பேசும். வன் பழி — கொடிய பழி. என் — என்ன.]

'அம்மா! கண்ணே! மறந்துவிடு'

கைகேயி தாம் சொல்வதை ஒப்புக்கொள்ள மாட்டாள் என்பதை முகக் குறியால் தெரிந்து கொண்டதும், பின் வருமாறு வேண்டிக் கொள்கிறார் சக்ரவர்த்தி:

"கண்ணே வேண்டும்
என்னினும், ஈயக்
கடவேன்;என்
உள்நேர் ஆவி
வேண்டினும் இன்றே
உனதன்றோ ?
பெண்ணே! வண்மைக்
கைகயன் மானே!
பெறுவாயேல்,
மண்ணே கொள் நீ!
மற்றைய(து) ஒன்றும்
மற !'' என்றான்.

[ஈயக் கடவேன் — கொடுப்பேன். உள்நேர் ஆவி — உள்ளே பொருந்திய உயிர். கைகயன் மானே — கேகய தேசத்து அரசன் மகளே. பெறுவாயேல் — பெற விரும்புவாயானால். மண்ணே — ராஜ்யத்தை மாத்திரம். மற்றையது ஒன்றும் — இன்னொன்று மாத்திரம்.]

"பெண்ணே! வரையாது கொடுக்கும் வண்மைக் குணம் நீ பிறந்த குலத்தில் தலை முறை தலை முறையாக வந்திருக்க வேண்டும். அப்படிக் கொடுக்கும் குலத்தில் உதித்த நீ இரக்கம் கொண்டு என் வேண்டுகோளுக்கு இணங்க வேண்டும். பெண்மைக்கும் வண்மைக்கும் பேர்போன நீ என் அன்பிற்கு உரிய கட்டழகி யல்லவா? அழகுக்குத் தக்க குணமும் உன்னிடம் அமைந்திருக்கிறது என்பது நிச்சயம்!'' என்று இவ்வாறு முகஸ்துதி செய்து காரியசித்தி பெறலாம் என்று நம்புகிறார் சக்ரவர்த்தி.

பெண்ணே! வண்மைக்
கைகயன் மானே!

என்று கொஞ்சி அழைக்கிறார். கொஞ்சி அழைத்தும்,

மண்ணே கொள் நீ!

என்கிறார். இப்படிச் சொல்லும்போது, ராஜ்யத்தை எவ்வளவு துச்சமாக மதிக்கிறார் என்பதும், வாய் முகஸ்துதி செய்யும் கைகேயியை உள்ளம் உள்ளபடி வெறுக்கிறது என்பதும் தொனிப் பொருள். ராமனைக் காட்டுக்கு அனுப்புவதை வாயால் சொல்லவும் முடியாமல்,

மற்றைய(து) ஒன்றும்
மற!

என்று கெஞ்சுகிறார் கைகேயியை நோக்கி. ஆனால், அந்த 'வண்மைக் கைகயன் மானு'க்கு இனி மறதி ஏது?

இளவரசியின் ஏளனம்

என்ன கெஞ்சியும் கொஞ்சியும், வண்மைக் கைகேயி. "உம்மைப் போல் உண்மையுடையவர் இனி இந்தப் பூமண்டலத்திலே வேறு ஒருவரும் இல்லை!'' என்று ஏளனமாய்த்தான் பதில் சொல்கிறாள்:

"என்னே? மன்னா!
யார்உளர் வாய்மைக்(கு)
இனி ?'' என்றாள்.

[வாய்மை — சத்தியம்.]

" கொடுத்த வரத்தை 'வேண்டாம் என்று சொல்லி விடு, கண்ணே! பெண்ணே' என்று என்னிடம் கொஞ்சுகிறீர். இது புத்திசாலித்தனமாக இருக்கலாம்; ஆனால் இது ஆண்மையா? அறமா? சத்தியந்தானா?" என்று பரிகசிக்கிறாள் கைகேயி.

சக்ரவர்த்தியின் கடைசிப் பிரார்த்தனை

" நின்மகன் ஆள்வான்;
நீ இனி(து) ஆள்வாய்!
நிலமெல்லாம்
உன்வயம் ஆமே,
ஆளுதி, தந்தேன்,
உரைகுன்றேன்:
என்மகன், என்கண்,
என்உயிர், எல்லா
உயிர்கட்கும்
நன்மகன், இந்த
நாடிற வாமை
நய!" என்றான்.

[வயம் — வசம். ஆளுதி — ஆள்வாயாக. உரைகுன்றேன் — சொல் தவறமாட்டேன். நாடு இறவாமை—நாட்டை விட்டு நீங்காமை. நய—விரும்புவாய்; (இங்கே) தயவு செய்வாய்.]

என்றெல்லாம் தசரதர் கெஞ்சிப் பார்த்தும் யாதொரு பயனும் ஏற்படவில்லை.

" பரதன் ஆண்டாலும் சரி, கைகேயி அம்மாள் தனக்கே முடிசூட்டிக் கொண்டு மகாராணியாக வீற்றிருந்து ஆட்சி செய்தாலும் சரி!" என்று கூடத் தசரதர் சொல்லிப் பார்த்தார். தமக்கு மட்டுமல்ல எல்லா உயிர்களுக்கும் ஸத்புத்திரனாக விளங்கும் ராமனுக்கு ராஜ்யம் வேண்டாம், அவன் ராஜ்யத்தை விட்டு நீங்காமலிருக்க மாத்திரம் அருள் புரிய



வேண்டும் என்று நயந்து வேண்டிக் கொண்டார்.

"கண்மணியாகிய ராமன் என் கண் வட்டத்தை விட்டுப் போகலாமா? என் உயிரான ராமன் போய்விட்டால் நான் உயிரோடு இருப்பது தான் எப்படி?" என்றெல்லாம் சொல்லி, 'நங்காய்!' என்று பரிதாபமான குரலில் பிரார்த்தனை செய்துகொண்டார்— ஏதோ ஒரு சக்தி வாய்ந்த துஷ்டதேவதையை நோக்கிப் பிரார்த்தனை செய்துகொள்ளும் ஓர் உபாஸகனைப் போல.

* * *

ஷைலக் என்ற யூதன் தன் தஸ்தாவேஜை ஞாபகப் படுத்தி, "ராத்தல் - சதையே வேண்டும்! அதிலும் ஹிருதயச் சதைதான் வேண்டும்!" என்று பிடிவாதம் செய்கிறான் அல்லவா, 'வெனிஸ் வணிகன்' என்ற ஷேக்ஸ்பியர்– நாடகத்திலே?

அப்படியே கைகேயி அம்மாளும் வரத்தையே மீண்டும் மீண்டும் ஞாபகப் படுத்துகிறாள்.

"என் வரத்தைப் பெற்றால்தான் உயிரை வைத்திருப்பேன்; இல்லாவிட்டால் உயிரை மாய்த்துக் கொள்வது நிச்சயம்!" என்று பயமுறுத்துகிறாள். உடனே தசரதர் சத்தியத்திற்குக் கட்டுப்பட்டு, ராமன் காதலையும் துறந்துவிட்டு, "வரத்தைக் கொடுத்தேன், கொடுத்தேன்" என்று கதறுகிறார்.

சூழ்ச்சி பலித்து விட்டது. ஆம், கூனி சூழ்ச்சியும் கைகேயி சூழ் வினையும், விதியின் சூழ்ச்சியும் தான்!



பி. ஸ்ரீ.

136. 'நீந்து, நீந்து, உன் மகனோடும்!'


'பரதன் நாடாள வேணும்; ராமன் காடாள வேணும்' என்ற இரண்டு வரங்களையே கேட்டாள் கைகேயி. தசரதரோ அவளுக்கு மூன்று வரங்கள் கொடுக்கிறார்! முதல் வரம் தமது மகனான ராமன் வனம ஆள்வான் என்பது. அடுத்த வரமாக, கைகேயி மகன் நாடாள்வான் என்று சொல்லிவிட்டாரா? அந்த மூன்றாவது வரம் தான் என்ன?

'வீந்தா ளேஇவ்
வெய்யவள்!' என்னா,
மிடல்வேந்தன்,
"ஈந்தேன். ஈந்தேன்
இவ்வரம்: என்சேய்
வனம்ஆள,
மாய்ந்தே நான்போய்
வானுல(கு) ஆள்வென்!
வசைவெள்ளம்
நீந்தாய், நீந்தாய்
நின்மக னோடும்
நெடி(து)!" என்றான்.

[வீர்தாளே — செத்தவள் தான். வெய்யவள் — கொடியவளான கைகேயி. என்னா — என்று எண்ணி. மிடல் வேந்தன் — வலிமையுடைய சக்ரவர்த்தி. சேய் — மகனான ராமன். மாய்ந்தே போய் — இறந்துபோய். ஆள்வென் — ஆளுவேன். வசை வெள்ளம் — பழியாகிய சமுத்திரம். நீந்தாய் — நீந்துவாயாக. நெடிது — நீண்ட காலம்.]

அலறுகிறது ஹிருதயம்!

'ராமன் வனமாள நான் வானாளப் போய்விடுவேன்!' என்பது தான் தசரதர் கொடுக்கும் இரண்டாம் வரம். மூன்றாவது வரம்



கைகேயி அம்மாளையும் இவள் மகனையும் குறிப்பது தான் — இவர்கள் காடாளவேண்டும் என்ற வரம் தான். ஆனால், அதை எவ்வளவு கொடுமையாக வழங்குகிறது தசரத வாக்கு! 'சிங்காசனத்திலா இருக்கப் போகிறாய்? வசை வெள்ளத்தில் அல்லவா நீந்தித் திளைந்து கொண்டிருக்கப் போகிறாய், உன் மகனோடும்? அடி பாவி கைகேயீ!' என்று அலறுகிறது தசரத ஹிருதயம். "இதற்காகவே கைகேயியும் இவள் மகனும் நீண்ட காலம் உயிரோடு இருக்கவேண்டுமாம்; வசை வெள்ளத்துக் குள்ளே சிரஞ்சீவியாய்க் கிடக்க வேண்டுமாம்."

சம்பாஷணையின் தொடக்கத்திலே ராமனைக் கைகேயி மகனாக்கிய ஹிருதயம், சம்பாஷணை முடிவில் எவ்வளவு ஜாக்கிரதையாக அந்த உறவை மறந்து ராமனை 'என் மகன்' என்றும், 'என் சேய் வனம் ஆள' என்றும் பேசுகிறது. கைகேயிமீது பொங்கிய கோபம் பரதனையும் சுற்றிப் பிடித்துக் கொள்கிறது.

வாள் பாய்ந்தது ஹிருதயத்திலே

'எவ்வளவு உயர்ந்த குணம் உள்ளவளாக இருந்த கைகேயி இப்படி வசைக்குள்ளாகி விட்டாளே, இனி இவள் செத்தவள் தான்! சரி, இவள் எப்படியாகிலும் தொலைந்து போகட்டும்! படுபாவீ!' என்றெல்லாம் கருதும் ஹிருதயம், 'இதோ பார், நீ கேட்ட வரத்தைக் கொடுத்து விடுகிறேன், — இதோ கொடுத்துவிட்டேன்!' என்று கதறுகிறது. 'ஏதோ ஜன்னிக் கோளாறு ஏற்பட்டவரைப் போலக் கதறுகிறார் சக்ரவர்த்தி!' என்று சொன்னாலும் குற்றமில்லை.

இப்படி வாய் விட்டு வரம் கொடுத்தாரோ இல்லையோ, உடனே பெருந் துயரம் வந்து இதயத்தில் வாள் போலப் பாய்கிறது. "ஆஹா! ராமன் காட்டுக்குப் போகிறான் — என் கண்! என் உயிர்! இந்தப் பாவி கைகேயியும், இவள் மகனை பரதனும் எத்தகைய பழிக்கெல்லாம் — எவ்வளவு இழிவான பழிக்கெல்லாம் - உள்ளாகிறார்கள்!'' என்ற துயரம் அது.

இந்தத் துயர - வாள் விழுந்து நெஞ்சைப் பிளக்க, அறிவு மாய்ந்து, செயலும் மாய்ந்து, மூர்ச்சையாய்ப் போகிறார் தசரதர்:

கூறா முன்னம்,
    கூறுப டுக்கும்
        கொலைவாளின்
ஏறும் என்னும்
    வன்துயர் ஆகத்(து)
        இடைமூழ்க,
தேறான் ஆகிச்
    செய்கைம றந்தான்;
        செயல்முற்றி
ஊறு நின்ற
    சிந்தையி னாளும்
        துயில்உற்றாள்

[கூறா முன்னம் — கூறும் முன்னம்; கூறவதற்கு முன்னே; சொன்னாரோ இல்லையோ. கூறுபடுக்கும் — பாதியாக அறுத்துத் தள்ளுகிற. கொலைவாளின் ஏறு — கொலை செய்வதில் தேர்ச்சி பெற்ற வாளாயுதம். வன்துயர் — கொடிய துயரம். ஆகத்து இடை — நெஞ்சினிடையே. தேறானாகி — தெளியாதவனாகி; அறிவு அழிந்தவனாகி. செயல் முற்றி — எடுத்த காரியம் கை கூடச் செய்து. ஊறு நின்ற சிந்தையினாளும்—ஒரே பிடிவாதத்தில் நின்ற கைகேயியும். துயில் உற்றான் — உறங்கி விட்டான்.]

உறக்கமும் வந்தது!

தன் காரியம் கைகூடுமோ என்று சலித்துக் கொண்டிருந்தது—ஒரே கவலை கொண்டிருந்தது—கைகேயி - சிந்தை. 'ஈந்தேன் இவ்வரம்!' என்று ஏதோ சாபம் கொடுத்தது போலத் தசரதர் சொன்னதே, கைகேயிக்குப்



யாம திருப்தியைக் கொடுத்து விடுகிறதாம். உள்ளம் நிம்மதியாகி உறக்கமே வந்து விடுகிறதாம். கவலையில்லாமல் தூங்குகிறாள் கைகேயி. சக்ரவர்த்தியோ மூர்ச்சித்துக் கிடக்கிறார்.

* * * *

'கைகேயிக்கு எப்படித்தான் உறக்கம் வந்ததோ?' என்று கேட்கலாம். ஆண்களைக் காட்டிலும் உடல் வலிமை குன்றிய பெண்களுக்கு உணர்ச்சி அதிகமாயிருக்கிறது. கைகேயியோ அறிவு-வசமாய் இருப்பதைக் காட்டிலும் உணர்ச்சி-வேகத்தின் வசமாக இருப்பவள்; கோசலைபோல் விசேஷ அறிவுத் திறமை வாய்ந்தவள் இல்லை. கூனி சூழ்ச்சியால் இவள் உள்ளத்திலே 'பரதனுக்கு எப்படியாவது பட்டம் கட்டியாக வேண்டும்' என்ற ஆத்திரம் குடி புகுந்துவிட்டது. இந்த ஆத்திரம் இவளது உணர்ச்சி-வெள்ளத்திலே ஊறித் திளைத்து, இவளையும் வேதனைக்குள் மூழ்கடித்து; சக்ரவர்த்தியையும் மரண வேதனைக்கு உட்படுத்தியது.

'கைகேயி உயிர் துறக்க வேண்டும்; அல்லது தசரதர் உயிர் துறக்க வேண்டும்!' என்ற நிலை ஏற்பட்டு விட்டது. 'வரம் பெறாவிட்டால் கைகேயி உயிரை விட்டுவிடுவாள்' என்று கண்டு கொண்ட தசரதர், வரத்தைக் கொடுத்துத் தம் உயிரையும் கொடுக்கத் துணிந்து விட்டார். ஆனால் தசரதர் - நிலையைக் கைகேயி - ஹிருதயம் உணர்ந்து கொள்ளவில்லை. உணர்ச்சி—வேகப் புயலில் கைகேயி - ஹிருதயம் படும் பாட்டிலே தசரதரையோ ராமனையோ கவனிக்கத் தோன்றவில்லை.

ஒரே கோரிக்கை, ஒரே பைத்தியம்—பரதன் நாடாள வேணும், ராமன் காடாளவேணும்! இந்தக் கோரிக்கையைச் சக்ரவர்த்தி மறுத்து விடுவாரோ என்ற பயம், 'ஈந்தேன், ஈந்தேன்' என்று இவர் கதறியதும் ஒரே அடியாக நீங்கிப் போய்விட்டது. பழி - வெள்ளத்தைப் பற்றிய பயமேயில்லை; அந்த வெள்ளத்திலே நீண்ட நீச்சல் உண்டு என்பதைக் குறித்துச் சிந்திக்கவேயில்லை. அமைதி வந்தது, உறக்கமும் வந்துவிட்டது! கைகேயியின் பெண்மைக்கு உரிய உண்மை தான் இது.

சித்திர ராமாயணம்

பி. ஸ்ரீ.

137. விடிந்தும் விடியாத இரவு

தசரதர் மூர்ச்சித்துக் கிடக்க, கைகேயி உறங்கிக் கொண்டிருக்க, அந்தப் பாவி இரவும் கழிந்துபோகிறது. அந்த இளவரசியின் அரண்மனைக்கு வெளியே வீதியில் கிழக்குமுகமாக நின்று பார்த்துக்கொண்டிருக்கிறோம். அந்த அரண்மனைக்குள்ளே நடந்த அநியாயத்தை நம்மால் மறக்க முடிய வில்லை. அதிலும் அன்புருவாகிய பெண் அப்படி நடந்து கொள்வ தென்றால்...

கிழக்கு வெளுக்கிற காட்சி

திருமணம் நடைபெற்ற நாள்முதல் எவ்வளவு காலம் ஒற்றுமையாக வாழ்ந்தவர்கள்! 'ஒரே உயிரல்லவா இந்த இருவர் செயல்களையும் இயக்கி வருகிறது?' என்று பேசும்படி நடந்து வந்தவள் அல்லவா கைகேயி? ஆனால் இப்போது சக்ரவர்த்தி உயிர் போகும் துன்ப நிலையை அடைந்தும், இவளுக்குச் சிறிதும் இரக்கம் வரவில்லையே! அன்பிற்கும் தியாகத்திற்கும் பேர்போன பெண்மைக்கும் தாய்மைக்கும் பொருத்தமில்லாத ராட்சஸ குணமல்லவா? வசை கைகேயிக்கு மட்டுமா? பெண் குலத்திற்கே தீராத வசை. இப்படியெல்லாம் எண்ணமிட்டு எண்ண மிட்டு இரவு நீங்கிக் கிழக்கு வெளுக்கிற அந்த இயற்கைக் காட்சியைப் பார்க்கிறோம்.

'பெண்களெல்லாம் வெட்கப்பட வேண்டிய காரியத்தைச் செய்து விட்டாள்!' என்று நினைத்த உள்ளத்திற்கு, 'இந்த இரவாகிய பெண்ணும் கைகேயியைக் குறித்து வெட்கப்படுகிறாள்; நம் முன் நிற்கவும் நாண மடைந்து தான் போய் விடுகிறாள்!' என்று தோன்றுகிறது:

சேண்உ லாவிய
நாள்எ லாம்,உயிர்
ஒன்று போல்வன
செய்து,பின்
ஏண்உ லாவிய
தோளி னான்இடர்
எய்த, ஒன்று(ம்)இ—
ரங்கிலா

வாள்நி லாநகை
மாத ராள்செயல்
கண்டு, மைந்தர்முன்
நிற்கவும்
நாணி னுள்என
ஏகி னுள், நளிர்
கங்கு லாகிய
நங்கையே !

[சேண் உலாவிய நாள் — விவாகம் செய்து கொண்டது முதல் நெடு காளாகத்தானே. உயிர் ஒன்றுபோல்வன — ஒரே உயிர் இருவர் செயல்களையும் இயங்கச் செய்ததுபோல. ஏண் உலாவிய — வலிமை பொருந்திய. தோளினன் — (இங்கே) தசரதர். இடர் — (இங்கே) மாணத் துன்பம். ஒன்றும் இரங்கிலா — சிறிதும் இரக்கம் இல்லாத. வான் நிலா — சந்திர கிரணம். நகை — புன்னகை. வான் நிலா நகை — (திருப்தியால் உண்டான) முகமலர்ச்சி; பற்கள் சிறிது தெரியும் படியான புன்னகையோடு கூடிய மகிழ்ச்சி. மாதரான் — (இங்கே) கைகேயி. மைந்தர் — ஆடவர். ஏகினன் — நீங்கினன். நளிர் — குளிர்ந்த. கங்குல் ஆகிய நங்கை — இராத்திரி என்கிற பெண்]

'வான் நிலா நகை மாதராள்' என்று கைகேயியைக் கவிஞன் குறிப்பிடுகிறான். வரம் கிடைத்து விட்டது என்ற திருப்திதான் இந்த முக மலர்ச்சிக்கும் அகமகிழ்ச்சிக்கும் காரணம். இத்தகைய திருப்திதான் கைகேயியின் உறக்கத்திற்கும் காரணம்.

விரித்த பந்தலைப் பிரித்தது !

உதய காலத்திலே நட்சத்திரங்களெல்லாம் மறைந்து விடுகின்றன. அந்த வானமும் நட்சத்திர வரிசைகளும், ஏதோ ஒரு முத்துப்பர்தலை இயற்





கையே அமைத்திருந்தது போலக் காட்சியளித்தன. பேரரசர்கள், சக்ரவர்த்திகள் விவாக மகோத்ஸவமோ, பட்டாபிஷேக மகோத்ஸவமோ நடத்துவதென்றால் பிரம்மாண்டமான கொட்டகை போட்டு, அந்தக் கொட்டகைப் பந்தலில் சரஞ் சரமாக முத்துக்களையும் தொங்க விடுவார்கள். தசரத சக்ரவர்த்தியின் அருமைத் திருமகனது பட்டாபிஷேக மகோத்ஸவத்திற்காக உலகம் முழுவதும் முத்துப் பந்தல் அமைத்தது போல் இருந்ததாம், நட்சத்திரக் கூட்டங்களோடு விளங்கிய வானம். இவ்வளவு அற்புதமாக அமைந்த பந்தல், பட்டாபிஷேகம் நடப்பதற்கு முன்னமே பிரிக்கப்படுவது போல் மறைந்து விடுகின்றனவாம் நட்சத்திரங்கள்.

கைகேயி சூழ்ச்சியால் பட்டாபிஷேகம்தான் நடைபெறாமல் போய் விடுகிறதே, இனிமேல் கொட்டகைப் பந்தல் எதற்கு? முத்துச் சரங்கள் எதற்காக?

சிரித்த பங்கயம்
ஒத்த செங்கண்
இராம னைத்திரு
மாலை, அக்
கரிக்க ரம்பொரு
கைத்த லத்(து)உயர்
காப்பு நாண் அணி
தற்குமுன்,—
வரித்த தண்கதிர்
முத்த தாகி, இம்
மண் அ னைத்தும்நி—
றைற,மேல்
விரித்த பந்தர்பி—
ரித்த தாமென
மீன்ஒ ளித்தன
வானமே.

[பங்கயம் - தாமரைப்பூ. செங்கண் - சிவந்த ரேகைகளோடு கூடிய கண்கள். திருமாலை - விஷ்ணுவை ; (இங்கே) விஷ்ணுவின் அவதார

மூர்த்தியை. கரி - யானை. காம் — கை. கரிக் காம் — யானையின் துதிக்கை. பொரு - ஒத்த. கைத்தலத்து — கையிலே. உயர் - சிறந்த. காப்புநாண் - மங்கல நாண். வரித்த - வரிசைப்படுத்திய. தண்கதிர் - குளிர்ந்த கிரணங்கள். முத்ததாகி - முத்துக்களையுடையதாகி. மண் அனைத்தும் - உலகம் முழுவதும். நிழற்ற — (இங்கே) கவிக்கும்படி. மேல் விரித்த - மேலே விரியச் செய்த. பந்தர் - பந்தல். மீன் ஒளித்தன வானமே - வானத்திலே நட்சத்திரங்களெல்லாம் மறைந்து போய் விட்டன.]

'சிரித்த பங்கயம் ஒத்த செங்கண் இராமன்' என்று கூறுவது கவனிக்கத்தக்கது. சிரித்த செந்தாமரை போல் இருக்குமாம் செம்மையான ரேகைகள் படர்ந்த ராமனுடைய கண்கள். உள்ளத்திலே ஊஞ்சலாடும் உத்ஸாகத்தைக் காட்டும் பலகணியாக இருக்கவேண்டும் கண்கள் என்பது குறிப்பு.

இத்தகைய ராமனுடைய நீண்ட கையில் புனிதமான மங்கல நாண் அணிவதற்கு ஏற்பாடு செய்திருந்தார்கள், முடிசூட்டுவிழாவை ஒட்டி. விழா நடைபெறாததால் அந்த மங்கல நாண் அணிவதற்கு முன்பே கொட்டகைப் பந்தலைப் பிரித்து விடுகிறார்களாம்.

இக்கருத்தை வைத்துக் கொண்டு கவிஞன்,

விரித்த பந்தர்பி—
ரித்த தாமென
மீன்ஒ ளித்தன
வானமே

என்று எவ்வளவு உள்ள நெகிழ்ச்சியோடு கூறுகிறான்!

அந்தப்புரத்திலே — அமைதி குடிகொண்ட அந்த நள்ளிரவிலே — பட்டாபிஷேகத்துக்குக் கைகேயி இழைத்த இடையூறு, நகர வாசிகள் ஒருவரும் அறியாதது. அவர்கள், 'எப்பொழுது விடியும்? எப்பொழுது ராமனது முடி சூட்டுவிழாவைக் காண்போம்?' என்ற பேராசையோடு காத்திருந்தார்கள். ராமன் முடிபுனைந்து வரப்போகும் கோலத்தையே நினைத்துக் கொண்டிருந்ததால் பல பெண்களுக்கும் இரவில் உறக்கம் வரவில்லை. அவர்கள் அந்தக் கோலத்தை நினைத்துக் கொண்டே கண்ணை மூடிய வண்ணம் பொய்யுறக்கம் உறங்கிக் கொண்டிருந்தார்களாம். பொழுது புலர்ந்ததை உணர்ந்ததும் தங்கள் படுக்கையிலிருந்து ஆவலோடு எழுந்திருக்கிறார்கள்.

'இந்தப் பாவி - இரவு!'

ஆடவர்களும் இரவு முழுவதும் உறக்கம் இல்லாமல் இருந்தார்கள். பொழுது விடிந்ததும் அவர்கள், 'ராஜ்ய லட்சுமியும் நாமும் வாழும் நாள் இதுவன்றோ? எங்கள் கண்ணும் மனமும் என்ன தவம் செய்தன!' என்று பெருங் குதூகலத்தோடு எழுந்திருக்கிறார்களாம்.

பட்டாபிஷேக தினத்துக்கு இடையே வந்த இந்த ஒரு இராத்திரி பல ஊழிக்காலங்கள் போல் வளர்ந்துகொண்டே இருந்ததாகத் தோன்றியது. ஆகவே இதை 'இந்தப் பாவி — இரவு' என்று அயோத்தி மைந்தர்கள் கருதுகிறார்களாம்.

ராம பட்டாபிஷேகத்தை விரைவில் காணவேண்டுமென்ற ஆசையால் இந்த இரவை இப்படிக் கழிக்கும் ஆசாமிகள், இதே இரவில் தாங்கள் எதிர்பார்த்திருக்கும் பட்டாபிஷேகமே தடுக்கப்பட்டது என்பதை அறிந்து கொண்டபின், இந்தப் பாவி — இரவை இன்னும் எவ்விதமாகத்தான் பழிப்பார்களோ? 'விடிந்தும் விடியாத இரவு' என்றுதானே சொல்லத் தோன்றும்?

சித்திர ராமாயணம்

பி. ஸ்ரீ.

138. சூரியனுக்கும் கோபமா!

விடியற்காலத்திலே அரண்மனை விளக்குகள் எல்லாம் ஒளி மழுங்கி அணையும் நிலையில் இருக்கின்றன. அந்த விதமாகத் தசரத சக்ரவர்த்தியின் உயிரும் தேய்ந்து உடம்பும் ஜீவ ஒளியை இழந்து வருகிறதாம்:

வையம் ஏழும் ஓரேழும், ஆருயி—
　　ரோடு கூட வழங்கும்அம்
மெய்யன், வீரருள் வீரன், மாமகன்
　　மேல்வி ளைந்ததோர் காதலால்,
நைய நையநல் ஐம்பு லன்கள்
　　அவிந்(து) அடங்கி நடுங்குவான்
தெய்வ மேனி படைத்த சேயொளி
　　போல்,ம ழுங்கின தீபமே.

[வையம் - உலகம். ஆருயிர் - அருமையான உயிர். மெய்யன் - சத்தியத்தையுடைய சக்ரவர்த்தி. மாமகன் - சிறந்த மகனான ராமன். நல் - நல்ல. தெய்வ மேனி - தேஜஸோடு கூடிய உடம்பு. சேயொளி - செம்மையான காந்தி.]

ஒளி மழுங்காத சத்திய தீபம்

கைகேயி ராஜ்யத்தைத்தான் கேட்டாள்; தசரதரோ மகாராஜ்யத்தோடு தம்முடைய உயிரையும் அவளுக்குத் தத்தம் செய்து விடுகிறாராம். தசரதரது மகாராஜ்யத்தை (ஏழோடு ஏழு லோகங்களான) பதினாலு லோகங்களிலும் பரவியிருந்ததாகக் கவிஞன் குறிப்பிடுவது அதன் பரப்பையும், சக்ரவர்த்தியின் ஆதிக்கத்தையும் உயர்வு நவிற்சியாகக் குறிப்பிடுவதேயாகும்.

தசரதரை 'அம்மெய்யன்' (சத்தியத்திற்குப் பேர்போனவன்) என்றும், 'வீரருள் வீரன்' (வீராதி வீரன்) என்றும் குறிப்பிடுவது கவனிக்கத் தக்கது. சத்தியத்திற்காக உயிரையும் இழந்து ராமனையும் இழக்கப் போகும் தியாகம் சத்திய வீரத்தின் சிகரமல்லவா?

சத்தியக் காதலுக்கும், ராமன் மீதுள்ள காதலுக்கும் ஏற்பட்ட போராட்டத்திலே, சத்தியம் ராமன் மீதுள்ள காதலையும் கடைசியாக



வென்று விடுகிறது. எனினும் புத்திர சோகம் தசரதருக்கு மரண வேதனையை விளைவித்து முடிவில் மரணத்தையும் விளைத்து விடப் போகிறது.

இந்தப் பிராணவஸ்தையைத் தான், 'நைய நைய நல் ஐம்புலன்கள் அவிந்து அடங்கி நடுங்குவான்' என்ற செய்யுளடி எவ்வளவு தெளிவாக நம் கண்ணுக்கே இலக்காகி விடுகிறது! அப்படி நைந்து நைந்து புலன்களெல்லாம் அவிந்து அடங்க நடுங்கிப் பதறிக் கொண்டிருக்கும் அந்த உடம்பை - அந்தத் திருமேனியை - தான் ஜீவ ஒளியிழந்தும் சத்தியத்திற்கு மங்காத ஜீவ ஒளி அளித்த தெய்வத் திருமேனி யல்லவா? - 'தெய்வ மேனி' என்று எவ்வளவு அருமையாகப் பேசுகிறான் கவிஞன்!

இசை விருந்து

அந்த விடியற் காலத்திலே அயோத்தி எங்கும் ஒரே இசை விருந்து தான். ராம பட்டாபிஷேகம் நடைபெறப் போகும் மகா மங்கள தினமல்லவா? அத்தகைய தினத்தின் அதிகால வேளையை வேறு எவ்விதமாகத் தான் கொண்டாடுவது?

வங்கி யம்பல தேன்வி ளம்பின;
வாணி முந்தின; பாணியின்
பங்கி அம்பரம் எங்கும் விம்மின;
பம்பை பம்பின; பல்வகைப்
பொங்கி யம்பல வும்க றங்கின;
நூபு ரங்கள் புலம்ப, வெண்
சங்கி யம்பின; கொம்பலம்பின;
சாம கீதம் நிரம்பவே.

[வங்கியம் - புல்லாங்குழல்கள். தேன் விளம்பின - தேனைப் பரிமாறின. வாணி - வாய்ப் பாட்டு. முரந்தின - முற்பட்டு ஒலித்தன. பாணி தாளம். பங்கி - வகைகள். அம்பரம் எங்கும் - (சுற்றியுள்ள) ஆகாயமெங்கும். விம்மின - விம்மி ஒலி செய்தன. பம்பை - ஒருவகை இசைக் கருவி. பம்பின - ஒலித்தன. பல்வகை - பலவகை. பொங்கியம் - பொங்கு இயம், பொங்குகின்ற வாத்தியம். கறங்கின - ஒலித்தன. நூபுரங்கள் - கால் - சிலம்புகள். புலம்ப - ஏதோ ஒரு சோக ஒலிபோல் ஆரவாரிக்க. சங்கியம்பின - சங்கு இயம்பின, சங்குகள் பேசுவது போல் ஒலித்தன. கொம்பலம்பின - கொம்பு அலம்பின, ஊதுகொம்புகள் ஒலித்தன. சாமகீதம் - சாமவேத கானம்.]

விருந்தில் தேனையோ, பாயசத்தையோ முதன் முதல் பரிமாறுவது ஒரு பழைய வழக்கம். இந்த இசை - விருந்திலும் முதன் முதல் தேனைப் பரிமாறி விளம்புகின்றனவாம் புல்லாங்குழல்கள். அந்த இசைக் குழல்களுக்கும் முற்பட்டு ஒலி செய்கிறது வாய்ப் பாட்டு. தாள வகைகள் சுற்றியுள்ள ஆகாயமெங்கும் விம்முகின்றனவாம். இவற்றோடு பம்பை என்ற கருவியின் பேரொலி ; பலவேறு வாத்தியங்களின் கூட்டொலி. சங்குகள் ஊதுகின்றன ஏதேதோ பேசுவது போல. ஊதுகொம்புகளும் ஒலிக்கின்றன இடையிடையே. இடை வெளிகளை யெல்லாம் நிறைத்து விடுகிறதாம் சாமகீதம்.

இப்படி யெல்லாம் நடைபெறும் இசை - விருந்திலே பரிமாறுகிறவர்களையும் சேர்த்துப் படம் பிடிக்கிறான் கவிஞன். "நூபுரங்கள் புலம்ப" என்று செய்யுளின் இடையே வருவது கவனிக்கத் தக்கது. புதிது புதிதாய்ப் பாட வருவதற்கும், இசைக் கருவிகளை எடுத்து வருவதற்கும் அங்கும் இங்கும் நடமாடும் பெண்களின் கால்களிலே சிலம்புகள் ஒலிக்கின்றன. இதைச் 'சிலம்புகளின் புலம்பல்' என்று குறிப்பிடுவதில் எவ்வளவோ கவி நயம் இருக்கிறது.

அந்தப் பெண்களின் கால்களிலே கிடந்து ஏதேதோ சோக கீதம் பாடுவதுபோல் ஒலிக்கின்றனவாம் நூபுரங்கள். இந்தப் புலம்பல்களும் இசையோடு இசையாய்க் கலந்து இசை - விருந்தைப் பூர்த்தி செய்கின்றன.



இந்த இசைக ளெல்லாம் கைகேயியின் வசையை எப்படி எடுத்துக் காட்டுகின்றன ! அவள் தோற்றுவித்த சோக கீதம் எப்படிப் பரவி மற்ற இசைகளை யெல்லாம் மறைத்து விடப் போகிறது ; சக்ரவர்த்தியின் உயிரையும் கொள்ளை கொள்ளப் போகிறது ; சக்ரவர்த்திக்கும் ஜனங்க

ளுக்கும் பொதுவான உயிராகிய ராமனையும் காட்டுக்குத் துரத்தப் போகிறது!

'ஆம், இவை யெல்லாம் அந்தப் பாவி-கைகேயி இந்தப் பாவி - இர வில் செய்த சூழ்ச்சி அல்லவா?' என்று கோபம் எழுகிறது உள்ளத் திலே. இதே சமயம் கைகேயியின் அரண்மனை வாசலிலிருந்து கிழக்கே பார்க்கிறோம். அந்த உதய சூரிய னுக்கு இவ்வளவு கோபமா, இந்தப் பாவி கைகேயிமீது?' என்று எண் ணத் தோன்றுகிறது. அப்படிச் சிவந்து உதிக்கிறானும் பாலசூரியன் உதயகிரியிலே.

பாபம் முற்றிய பேதை செய்த
 பகைத்தி றத்தினில், –வெய்ய
 வன்
கோபம் முற்றிமி கச்சிவந்தனன்
 ஒத்த னன், குணக் குன்றிலே!

[பாபம் முற்றிய - பாவத்திலே முற்றிப்போன. பேதை - பெண்; (இங்கே) கைகேயி. பகைத்திறத்தி னில் - பகைத் தன்மையினால். சிவந்தனன் ஒத்தனன் - சிவப்பு நிறத்தை அடைந்தவனை ஒத்தான்.

கிழக்கே சிவப்பு நிறமாகத் தோன்றும் பால சூரியனைப் பார்த்த தும், கைகேயி செய்த கொடுமை தான் சூரிய மண்டலத்திலும் அப் படிக் கோபம் மூட்டி விட்டது என்று எண்ணத் தோன்றுகிறதாம். சூரிய குலத்திலே தோன்றியவரல் லவா தசரத சக்ரவர்த்தி?

* * *

கவிஞனுடைய சோக கீதமும் கோப கீதமும் காலை யிளங் காற்றி லும் காலைக் கதிரொளியிலும் மிதந்து வருவது போலத் தோன்று கிறது இப்பாடல்களிலே.

சித்திர ராமாயணம்

பி. ஸ்ரீ.

139. எதிர்பார்த்து இன்பம் அடைந்தவர்கள்

நவ நாகரிக நங்கையரே சாயம் பூசி அழகு செய்து கொள்கிறார்கள் என்பதில்லை. மருதாணி (மருதோன்றி) பூசிக் கைகளையும் கால்களையும் நகங்களையும் அழகு செய்துகொள்ளும் பெண்களை நமது நாட்டுப் புறங்களிலே இன்றும் பார்க்கிறோம். பழைய காலத்தில் செம்பஞ்சுக் குழம்பை (செம்பஞ்சால் செய்த ஒரு வகைச் சாயத்தை)க் காலில் பூசி அழகு செய்து கொள்வார்கள்.

ஒரு நாள் அதிகாலையிலேயே அயோத்தி நகரிலுள்ள இளம் பெண்கள் காலில் செம்பஞ்சுக் குழம்பை அணிந்து கொண்டார்களாம் அவசர அவசரமாக. பால்போல் வெண்மையான சங்கு வளைகளையும் தேர்ந்தெடுத்துக் கைகளில் அணிந்து கொண்டார்கள், — இந்நாளில் கண்ணாடி வளையல்களையும் 'ஸெலயுலாய்ட்' வளையல்களையும் தங்க வளையல்களையும் பெண்கள் தேர்ந்தெடுத்து அணிந்து கொள்வது போல. கொஞ்சம் நிதானமாகக் கண்களில் மையிட்டுக் கொண்டார்கள் ; புது மலர்களைக் கூந்தலில் சூடிக் கொண்டார்கள்.

அழகா, ஹிம்ஸையா ?

ஏன் இந்த அலங்காரம்? இவர்களுடைய காதலர்களுக்குத் தெரிந்த செய்திதான். அவர்களும் ராம பட்டாபிஷேகத்தைக் கருதிப் பரபரப்பாகவே வருகிறார்கள். யானைபோல் கம்பீரமாக நடையிட்டு வருகிறார்கள். தங்கள் காதலிகள் அழகு செய்து கொள்வதைப் பார்த்துக்கொண்டே வருகிறார்கள். காதலிகள் செம்பஞ்சுக் குழம்பைக் கால்களுக்கு ஊட்டுவதையும், கைகளில் வளையல்கள் அணிந்து, அந்த வளைக்கையால் கூந்தலுக்கு மலர் சூட்டுவதையும், கண்களுக்கு அஞ்சனம் தீட்டுவதையும் பார்த்துக் கொண்டே வருகிறார்கள்.

அந்தக் கண்களின் கூர்மையை எவ்வளவு நன்றாக அறிந்தவர்கள்! வாளும் அம்பும்போல் எத்தனை தடவை அந்தக் கண்கள் இந்த ஹிருதயங்



களை ஹிம்ஸித்திருக்கின்றன, படாதபாடு படுத்தி யிருக்கின்றன! 'இந்தக் கொடிய கண்களுக்கு அஞ்சனமும் வேண்டுமோ?' என்று எண்ணிப் பார்க்கிறார்கள்; பார்த்ததும், "அஞ்சனமா அது? வாளுக்கும் அம்புக்கும் விஷம் தீட்டுவது போல் அல்லவா இருக்கிறது? அஞ்சனம் என்று பெயர் வைத்து நஞ்சை யல்லவா பூசுகிறார்கள். அந்தக் கண்கள் என்கிற வாள் மீதும் அம்பு மீதும்?'' என்றெல்லாம் எண்ணுகிறார்களாம்.

இதற்குள்ளே மலர்களைக் கூந்தலில் சொருகிக் கொண்டு பெண்கள் போய் விடுகிறார்கள், ராம பட்டாபிஷேகக் காட்சிகளைக் கண்படைத்த பயனைக் காண வேண்டும் என்று:

குஞ்சரம் அனையார்
 சிந்தைகொள் இளையார்,
பஞ்சினை அணிவார்;
 பால்வளை தெரிவார்;
அஞ்சனம் என,வாள்
 அம்புகள் இடையே
நஞ்சினை இடுவார்;
 நாள்மலர் புனைவார்.

[குஞ்சரம் — யானை. அனையார் — ஒத்தவர்கள். சிந்தைகொள் — சிந்தைகளைக் கப்பமாகக் கொள்கிற. இளையார் — இளைய மங்கையர். பஞ்சு — (இங்கே) செம்பஞ்சுக் குழம்பு. பால்வளை — பால் போலும் வெண்மையான சங்கு வளையல்கள். தெரிவார் — தேர்ந்தெடுப்பார்கள். நாள்மலர் — புதிய மலர்கள்; அப்போது மலர்ந்த பூக்கள். புனைவார் — அழகாய்ச் சூட்டிக் கொள்வார்கள்.]

தமக்குத் தாமே அழகு செய்து கொள்ளும் பெண்களையும், ஒருவருக்கொருவர் வளையல் முதலியவற்றைத் தேர்ந்தெடுத்து அணிசெய்து பார்க்கும் பெண்மணிகளையும், வாள் போன்ற கண்களை வீசி அம்பு போடுவது போலப் பார்க்கும் பெண்களையும், மை எழுதிய அக் கண்களின் அந்தப் பார்வைக்கு எதிரே, நஞ்சு தீட்டிய அம்புகளுக்கு இலக்கானவர்களைப்

போல், திண்டாடித் தத்தளிக்கும் ஆண்மக்களையும் பார்த்துக் கொண்டே நாமும் அவர்களோடு புறப்படுகிறோம்.

எண்ண எண்ண இன்பம்

புறப்பட்டு நகரமெங்கும் சுற்றிப் பார்க்கிறோம். பட்டாபிஷேக மகோத்ஸவத்தை எதிர்பார்த்திருக்கும் நகர மாந்தர்களின் முகத்தோடு அகத்தையும் பார்க்கிறோம். சூரியன் உதித்து ஆனந்தமா யிருக்கும் காலை வேளை. கைகேயி அரண்மனைக்குள்ளே இரவில் நடந்த கொடுமை அயோத்தி மாநகரில் ஒருவருக்கும் தெரியாது. ஒவ்வொருவரும் ஒவ்வொரு விதத்தில் பட்டாபிஷேகத்தை எண்ணி எண்ணி ஆனந்தப் படுகிறார்கள்.

இளம் பெண்கள் வயது முதிர்ந்த பெண்கள், இளைஞர்கள், வயது முதிர்ந்த ஆண் மக்கள் எல்லாரும் அடைந்திருக்கும் ஆனந்தத்தை என்னென்பது?

மாதர்கள், கற்பின் மிக்கார்,
கோசலை மனத்தை ஒத்தார்;
வேதியர் வசிட்டன் ஒத்தார்;
வேறுள மகளிர் எல்லாம்
சீதையை ஒத்தார்; அன்னாள்
திருவினை ஒத்தாள்; அவ்வூர்ச்
சாதுகை மாந்தர் எல்லாம்
தயரதன் தன்னை ஒத்தார்.

[கற்பின் மிக்கார் - கற்பிலே மிகுந்தவர். வேதியர் - பிராம்மணர். வேறுள மகளிர் - வேறாகவுள்ள இளம் பெண்கள். திருவினை - லக்ஷ்மியை; (இங்கே) ராஜ்ய லட்சுமியை. சாதுகை மாந்தர் - ஸாத்விக குணமுள்ள மக்கள்.]



'ராம பட்டாபிஷேகத்திலே கோசலைபோல் ஆனந்தமாக இருக்கிறார்களாம் வயது முதிர்ந்த மாதர்களெல்லாம். கோசலைபோல் தங்களையும் பாக்கியசாலிகளாக நினைத்து விடுகிறார்கள். தங்கள் புதல்வனே சக்ரவர்த்தி ஆவதுபோல் அவ்வளவு ஆனந்தம்.

'மற்ற இளம் பெண்களின் ஆனந்தத்தை என்னென்பது?' என்று கவிஞன் ஆலோசிப்பதற்குள், வேதியர்கள் அந்தக் குதூகலத்திலே படும் பாடு கண்ணெதிரே வந்து விடுகிறது. ஒவ்வொரு புரோகிதனும் - பஞ்சாங்கப் பிராம்மணன் கூட - தன்னை ராமனுக்கு முடிசூட்டப் போகும் வசிஷ்ட மகரிஷியாகவே மதித்து ஆனந்தம் அடைகிறானும். உடனே இளம் பெண்களின் ஆனந்தமும் இத்தகையதென்று தெரிந்து விடுகிறது கவிஞனுக்கு. அவர்களெல்லாம் சீதையைப் போல் அவ்வளவு பாக்கியசாலிகளாகத் தங்களையும் பாவித்துக் கொள்கிறார்கள். தங்களுடைய காதலர்களுக்கே மகாராஜ்யம் கிடைக்கப் போகிறது என்ற மயக்கம்.

இப்படியெல்லாம் ஆனந்தம் கரைபுரண்டோடும் அயோத்தியில் சீதையின் ஆனந்தத்தை என்னென்பது? அவள் ஸாக்ஷாத் ராஜ்யலட்சுமிபோல் ஒரே ஆனந்தமயமாக இருக்கிறாளாம்.

இத்தகைய ராஜ்யத்திலே ஸத்வ குணத்திலும் ஆண்டிலும் ஒருங்கே முதிர்ந்தவர்களெல்லாம், 'நாங்களும் தசரதச் சக்ரவர்த்திபோல் பாக்யசாலிகள்!' என்றே எண்ணி விடுகிறார்களாம்.

என்ன ஆனந்தம்! என்ன பரபரப்பு! இந்த நிலையில் உள்ளவர்கள் இனி அடையப் போகும் நிலைதான் என்ன?

சித்திர ராமாயணம்

பி. ஸ்ரீ.

140. ஆனந்த வெள்ளம்

பட்டாபிஷேகச் செய்தி கேட்டதும் பல திசைகளி லிருந்தும் கும்பல் கும்பலாய் அயோத்திக்கு வந்து சேருகிறார்கள் அரசர்கள், தங்கள் பரிவாரங்களுடன். அப்படி வரும் அந்தக் கூட்டத்தைப் பார்த்தால், 'என்ன, அந்தத் திசைகளிலுள்ள நாடுகளில் ஆள்-பஞ்சம் தான்! அங்கே ஒரு மனுஷ்யன்கூட அரண்மனையிலோ வீட்டிலோ இருக்க மாட்டான் போலிருக்கிறது!' என்று சொல்லத் தோன்றுகிறதாம்.

ஒரே கூட்டம்!

இந்தப் பெருங் கூட்டத்திலே அரசர்களும் சாமானியர்களோடு நெருங்க வேண்டியதுதான்; விலகி மரியாதையாய், கம்பீரமாய் ஆடி அசைந்து போக இடமிருந்தால் தானே?

'ஏகுமின், ஏகும்' என்றென்(று)
இடையிடை நிற்றல் அல்லால்,
போகில, மீள கில்லா,
பொன்னகர் வீதி யெல்லாம்!

[ஏகுமின் — நடவுங்கள். ஏகும் - நடவுங்கள். போகில—போகவு மில்லை. மீளகில்லா — திரும்பவும் முடியவில்லை. பொன்னகர் — அழகிய நகரம்.]

—என்றபடி ஆடவர் கூட்டமும், மகளிர் கூட்டமும் எங்கும் நெருங்கிக் கொண்டிருக்கின்றன. 'போங்கள், போங்கள்' என்று பல முறை சொல்லிக்கொண்டே யிருக்கும் சப்தம் காதில் விழுகிறது; ஆனால் 'அந்தக் கூட்டம் போகவு மில்லை, திரும்பவும் முடியவில்லையே!' என்றுதான் சொல்லத் தோன்றுகிறது.

அந்தக் கூட்டத்தின் தொகையை உள்ளபடி கணக்கிட்டுப் பேச முடியவில்லையாம். சாதாரணமாய் ஸ்ரீரங்கம் முதலான இடங்களில் திருவிழாவுக்காகக் கூடும் கூட்டத்திலேயே அவரவர்களுக்குத் தோன்றிய விதமாக 'புருஷர் கூட்டம்தான் அதிகம்' என்றும், 'அப்படியில்லை, பெண்கள்'

தான் பெருங் கூட்டம்' என்றும் விவகரிப்பதைக் கேட்டிருக்கிறோம். இதே இப்படியானால், அயோத்தியில் ராம பட்டாபிஷேகத்துக்காகக் கூடிய கூட்டத்தைக் குறித்துச் சொல்லவா வேண்டும்?

சிலர் ஒரு பக்கத்திலே இரத்தின கிரீடங்களின் கடலைக் கண்டு, 'அப் பெருங் கூட்டத்திலே எல்லாம் அரசர்கள் போலத் தோன்றுகிறது' என்று சொல்கிறார்கள். வேறு சிலர், "முடி மன்னர்களே அவ்வளவு அதிகம் என்றால், படை வீரர்களின் கூட்டத்தைச் சொல்லவா வேண்டும்? அதோ அந்தப் பக்கத்தில் 'ஜண ஜண' வென்று சப்திக்கும் அந்த ஆயுதங்களின் கடலை — அந்த வீர சமுத்திரத்தை—நீங்கள் பார்க்க வேண்டும்" என்று வாதிக்கிறார்கள். "ஆண்களின் கூட்டம் அதிகமா? பெண்களின் கூட்டம் அதிகமா?" என்பது வேறொரு பக்கத்தில் நடைபெறும் ருசிகரமான வாதம். இன்னும் ஓரிடத்தில் "வந்த ஜனங்கள் அதிகமா? வரப் போகும் ஜனங்கள் அதிகமா?" என்பதைக் குறித்துத் தர்க்கித்துக் கொண்டிருக்கிறார்கள்.

இவ்விதமாக, யானை கண்ட குருடர் போல், அவரவர் கண்டதையே சாதிப்பதல்லாமல் அந்த மகா ஜன சமுத்திரத்தின் காட்சியை முழுதும் கண்டு தெரிந்துகொண்டவர் யார்?

வேந்தரே பெரிதென் பாரும்,
வீரரே பெரிதென் பாரும்,
மாந்தரே பெரிதென் பாரும்,
மகளிரே பெரிதென் பாரும்,




போந்ததே பெரிதென் பாரும்,
புகுவதே பெரிதென் பாரும்,
தேர்ந்ததே தேரின் அல்லால்,
யாவரே தெரியக் கண்டார்?

[மாந்தர்—(இங்கே) ஆடவர். போந்ததே—வந்து போன ஜனக் கூட்டமே. புகுவதே—வந்துகொண்டிருக்கும் கூட்டமே. தேர்ந்ததே—தெரிந்ததையே. தேரின் அல்லால் — தெரிந்ததாக எண்ணிச் சொன்னார்களே யொழிய.]

தமிழ் நாட்டிலுள்ள திருவிழா, தேர்விழாக்களைப் பார்த்து அனுபவித்துத்தான் கவிஞன் ராம பட்டாபிஷேக விழாவையும் அனுபவிக்கப் பார்க்கிறான்; 'அயோத்தி வாசிகளும் நமது ஜனங்கள் போலத்தான்' என்று காட்டுகிறான். கம்பன் கண்ட அயோத்தி முதலியன எல்லாம் தமிழ் நாட்டில் தானே?

பெண்களின் உணர்ச்சி-வெள்ளம்

இந் நிலையில் மகளிர் தனியாக ஒரே கூட்டமாய் நெருங்கி வரும் கோலாகலத்தையும் ஒரு புறம் கவிஞன் காட்டுகிறான். அந்தக் கண்களிலே தான் என்ன என்ன அழகுகள், பண்புகள்; எத்தனை யெத்தனை உத்ஸாகங்கள்! அந்த அழகுகளையும் அருமை பெருமைகளையும் கொடுமைகளையுங் கூட எப்படி எடுத்துக் காட்டுகிறது அந்தக் கண்களிலே தீட்டிய அஞ்சனம்! சரி; அவர்கள் நடமாடுகிறார்களா? அல்லது நடனமாடி வருகிறார்களா?



மயில்-கூட்டம் போல்—ஆம், தோகை விரித்து நடனம் செய்யும் மயில்-குழாம் போல் — நெருங்கி வரும் அந்தப் பெண்களைப் பாருங்கள் :

குவளையின் எழிலும் வேலின்
    கொடுமையும் குழைத்துக் கூட்டி,
திவளும்அஞ் சனம்என்(று) ஏய்ந்த
    நஞ்சினைத் தெரியத் தீட்டி,
தவளஒண் மதியுள் வைத்த
    தன்மைசால் தடங்கண் நல்லார்
துவளும்நுண் இடையார், ஆடும்
    தோகைஅங் குழாத்தில், தொக்கார்.

[குவளை — நீலோற்பல மலர். எழில் - அழகு. திவளும் அஞ்சனம் - எடுத்துக் காட்டும் மை. என் - என்ற பெயரோடு அமைந்த. தவள - வெண்மையான. ஒண் - பிரகாசமான. மதி - சந்திரன். தன்மைசால் - தன்மை மிகுந்த. தடங்கண் - பெரிய கண்கள். நல்லார் - (இங்கே) அழகிய பெண்கள். துவளும் - துவண்டு ஒடிவதுபோலத் தோன்றும். நுண்- மெல்லிய. இடையார் - இடையையுடைய பெண்கள். தோகை - தோகை விரித்தாடும். அம் குழாம் - அழகிய கூட்டம். குழாத்தின் - கூட்டம் போல. தொக்கார் - தொகுதியாகக் கூடி நெருங்கி வந்தார்கள்.]

அந்த முகத்தையும் கண்களையும் பார்த்தால், சந்திரனுக்குள்ளே நீல மலரின் அழகைப் பொழிந்து, வேலின் கொடுமையையும் குழைத்துக் கூட்டி, அஞ்சனம் என்ற நஞ்சினைத் தீட்டி வைத்ததுபோலவே இருக்கிறார்களாம். அந்த மை தீட்டிய கண்களின் அழகும் உல்லாசக் குறும்புப் பார்வைகளும் அப்படி ஹிம்ஸிக்கின்றன ஆடவர் நெஞ்சுகளை !

இந்தப் பாட்டிலே அந்தப் பெரிய கண்களை வர்ணிப்பதற்கே மூன்றுஅடிகள் — அதாவது பாட்டின் முக்கால் பங்கு. இந்தக் கண்களுக்கே வீதியெல்லாம் இடம் போதாதென்று தோன்றுகிறது !

* * *

ஒரு புறம் அரச வெள்ளம், வீர சமுத்திரம். இந்தப் பக்கத்திலோ கண்ணின் வெள்ளம். எல்லாம் கண்கள், எங்கும் கண்கள். அழகுக் கண்கள், ஆனந்தக் கண்கள், குறும்புக் கண்கள்—இப்படி எத்தனை ரகங்கள் !

இதே சமயத்தில் அரண்மனை வாசலில் ஒரு பெரிய ஆரவாரம், வேதகோஷம், — 'விலகுங்கள், விலகுங்கள்' என்ற சப்தம். அப்படி வருகிறவர் யார் ?